செ.வெ.எண்:-05/2020 நாள்:02.04.2020

**திண்டுக்கல் மாவட்டம்**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுத்திடும் பொருட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.1000/- வீதம் நிவாரணத்தொகை வழங்கும் பணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்.**

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுத்திடும் பொருட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.1000/- வீதம் நிவாரணத்தொகை வழங்கும் பணியை திண்டுக்கல் ஆர்.எம். காலனி கூட்டுறவு நியாயவிலைக் கடை, மேட்டுப்பட்டி மற்றும் பேகம்பூர் ஆகிய பகுதிகளில் உள்ள நியாயவிலைக் கடைகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் இன்று(02.04.2020) பார்வையிட்டு தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு அரசு கொரோனா வைரஸ் நோய்த் தொற்றை தடுக்க தொடர்ந்து தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 24.3.2020 அன்று சட்டப்பேரவையில் கொரோனா வைரஸ் குறித்து வெளியிட்ட நிவாரண அறிவிப்பில், அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் ரூ.1000/-(ரூபாய் ஆயிரம் மட்டும்) நிவாரணமாக வழங்கப்படும் என்றும் ஏப்ரல் மாதத்திற்கு அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் அவர்களின் குடும்ப அட்டைக்கு தகுதியான அளவு அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய் மற்றும் சர்க்கரை **விலையின்றி** வழங்கப்படும் எனவும் அறிவித்தார்.

அதன்படி திண்டுக்கல் மாவட்டத்தில் அரிசி பெறும் 6,27,004 குடும்ப அட்டைதாரர்களுக்கு நிவாரணத்தொகை வழங்கும் பணி இன்று(02.04.2020) தொடங்கப்பட்டுள்ளது. குடும்ப அட்டைதாரர்கள் ரொக்க தொகை ரூ.1000/-ஐ மின்னணு குடும்ப அட்டையின் (Smart card) மூலம் சம்பந்தப்பட்ட நியாய விலைக்கடைகளில் பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு, முன்கூட்டியே டோக்கன் வழங்கப்பட்டு, நியாய விலைக்கடைகளில், தெருவாரியாக / அ.பதிவேடு எண் வாரியாக தினமும் 200 முதல் 300 நபர்களுக்கு நிவாரணத்தொகை வழங்கப்படுகிறது. இந்த விபரம் ஒவ்வொரு நியாய விலைக்கடைகளிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட குடும்ப அட்டைதாரர்கள் குறிப்பிட்ட நாளில் நியாய விலைக்கடைகளுக்குச் சென்று விலையில்லா பொருட்களுடன் ரொக்கத் தொகையினையும் பெற்றுக் கொள்ளலாம்.

கொரோனா வைரஸ் உதவித் தொகையினைப் பெற வரும் குடும்ப அட்டைதாரர்கள் ஒரு மீட்டர் இடைவெளியில் தனிமைப்படுத்தி (Social Distancing) வாங்கும் வகையில் கட்டங்கள் வரையப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குடும்ப அட்டைதாரர்கள் இந்த அறிவுரையை தவறாமல் பின்பற்ற வேண்டும். பொதுமக்கள் சமுதாய இடைவெளியை கடைப்பிடிப்பதை ஒழுங்குபடுத்துவதற்காக தன்னார்வலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

உதவித்தொகை வழங்கும்போது, அரசு குடும்ப நலம் மற்றும் சுகாதாரத் துறை கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுக்க வெளியிட்டுள்ள வழிகாட்டுதல்களை தவறாது கடைபிடிக்க வேண்டும். மேலும், அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் நிவாரணத்தொகை ரூ.1000/- வழங்க அரசு உத்திரவிட்டுள்ளதால், பொதுமக்கள் கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு, தங்கள் குடும்பத்திற்கான நிவாரணத்தொகையினை விநியோகிக்க ஒதுக்கீடு செய்யப்பட்ட நாளில், குறிப்பிட்ட நேரத்தில் நியாய விலைக்கடைகளுக்கு சென்று நிவாரணப் பொருட்களை பெற்றுக்கொள்ளலாம் என திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**அதனைத்தொடர்ந்து பொதுமக்களிடையே கொரோனா வைரஸ் தொற்று குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும்விதமாக அச்சடிக்கப்பட்ட துண்டு பிரசுரங்கள் அரசு அலுவலர்கள் மற்றும் தன்னார்வலர்கள் மூலம் வழங்கப்படுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்.**

---

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல்.**

---